**14.01.15**

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### 631 பேருக்கு விலையில்லா ஆடுகள்

தேனி மாவட்டத்துக்கு உள்பட்ட 5 ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 631 பயனாளிகளுக்கு, செவ்வாய்க்கிழமை தமிழக அரசின் விலையில்லா வெள்ளாடுகளை ஆட்சியர் ந. வெங்கடாசலம் வழங்கினார். தேனி, க.மயிலை, சின்னமனூர், கம்பம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்பட்ட கிராமங்களில் நடைபெற்ற விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு, தேனி மக்களவைத் தொகுதி உறுப்பினர் ரா. பார்த்திபன் முன்னிலை வகித்தார். பாலூத்து, நரியூத்து, தும்மக்குண்டு, பொன்னன்படுகை, தப்புக்குண்டு, புலிகுத்தி, டி.சிந்தலைச்சேரி, டி.ரங்நாதபுரம், நாராயணத்தேவன்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு, அரசு சார்பில் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கப்பட்டன. கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் தனசேகரன், உதவி இயக்குநர்கள் முருகேசன், ஜெகதீசன், மாவட்ட ஊராட்சிகள் தலைவர் சு. மகாலிங்கம், அதிமுக மாவட்டச் செயலர் டி. சிவக்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### திருப்புவனம் பகுதியில் நெல் அறுவடைப் பணிகள் மும்முரம்

திருப்புவனம் பகுதியில் நெல் அறுவடை பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. விளைச்சலுக்கு தேவையான நீரின்றி வேளாண்மை பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் வருத்தம் தெரிவித்துள்ளனர். சிவகங்கை மாவட்டம் திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மணலூர், கொந்தகை,பிரமனூர், லாடனேந்தல், பூவந்தி, பழையனூர் ஆகிய பகுதிகளிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும், விவசாயிகள்

பெரும்பாலும் வைகை ஆற்று நீரை நம்பியும், ஆழ்துளை கிணறுகளை நம்பியும் விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலையில் இந்தாண்டும் பருவமழை பொய்த்து போனதால், பாசனத்துக்காக போதிய நீரை, வைகையாற்றிலிருந்து திறக்க முடியவில்லை. இதனால் பெரும்பாலான கண்மாய்கள் நீரின்றி வறண்டு காணப்பட்டன. மேலும் கண்மாய் பாசன விவசாயிகள் தவிர, ஏனைய விவசாயிகள் ஆழ்துளை கிணறு மூலம் குறைந்தளவு தண்ணீரைக் கொண்டு புரட்டாசி, ஐப்பசி ஆகிய மாதங் களில் சிறு பகுதியை உழவு செய்து வேளாண்மை செய்தனர். அவை தற்போது விளைச்சலாகி அறுவடைப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுகுறித்து விவசாயி அய்யனார் கூறியது: ஆழ்துளை கிணற்று நீரை பயன்படுத்தி 2 ஏக்கர் நிலத்தில் நெல் நடவு செய்தேன். தற்போது விளைச்சலாகி அறுவடை பணிகள் நடைபெறுகிறது. பருவ மழை இல்லாததால், போதிய நீரின்றி விளைச்சல் குறைவாக உள்ளது. இதனால் செலவு செய்த தொகை கூட வருவது அரிதாக உள்ளது என்றார்.

## <u>பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 81.47 அடி</u>

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரபடி 81.47 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 222 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 600 கன அடி நீரும், வாய்க்காலில் 2,000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 16.4 டி.எம்.சி.

## <u>மண்புழு உரம் தயாரிக்க இலவசப் பயிற்சி</u>

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் மண்புழு உரம் உற்பத்தி செய்யும் முறை குறித்த ஒரு நாள் இலவசப் பயிற்சி வரும் 20-ஆம் தேதி நடைபெற உள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் பங்கேற்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்தி: நாமக்கல்-மோகனூர் சாலையில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும்

ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் செயல்பட்டு வரும் வேளாண் அறிவியல் நிலையத்தில் இந்தப் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. மண்புழு உரம் தயாரிக்கும் இடம் தேர்வு, மண்புழுவைத் தேர்வு செய்தல், தொட்டி மற்றும் குவியல் முறையில் மண்புழு உரம் தயாரித்தல், பயிர்க் கழிவுகள், நகரக் கழிவுகள் மற்றும் கோழிக் கழிவுகளில் இருந்து மண்புழு உரம் தயாரித்தல், ஒவ்வொரு வேளாண் பயிர்களுக்கும் மண்புழு உரப் பரிந்துரை அளவு, மண்புழு உரத்தின் நன்மைகள், மண்புழு ஊட்ட நீர் தயார் செய்யும் முறை, அதனைப் பயிர்களுக்குத் தெளிக்கும் அளவு முறை குறித்து செயல்முறை விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியில் சேர விருப்பமுள்ள விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் நேரில் வந்தோ அல்லது 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்கள் மூலமாகவோ வரும் 19-ஆம் தேதிக்குள் பெயரைக் கண்டிப்பாக முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். பயிற்சிக்கு வரும் விவசாயிகள் தங்களுடைய ஆதார் எண்ணை கண்டிப்பாகப் பதிவு செய்ய வேண்டும்.

## ராசிபுரத்தில் ரூ.ஒரு கோடிக்கு பருத்தி ஏலம்

ராசிபுரம் வேளாண்மைக் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தில் திங்கள்கிழமை நடந்த ஏலத்தில் ரூ.1.05 கோடிக்கு பருத்தி ஏலம் போனது. ராசிபுரம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கம் (ஆர்.சி.எம்.எஸ்.,) சார்பில் கவுண்டம்பாளையம் குடோனில் பருத்தி ஏலம் நடந்தது. மொத்தம் 7,600 மூட்டை பருத்தி ஏலத்துக்குக் கொண்டு வரப்பட்டது. டி.சி.எச். ரகம் குவிண்டாலுக்கு குறைந்தபட்சமாக ரூ 4259, அதிகபட்சமாக ரூ.4710, ஆர்.சி.எச். ரகம் குறைந்தபட்சமாக ரூ.3605, அதிகபட்சமாக ரூ.4129வீதம் ஏலம் போனது. மொத்தம் ரூ.1.05 கோடிக்கு பருத்தி ஏலம் போனது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**<u>உரமில்லை... மருந்தில்லை... நீரில்லை ஆனாலும் விளையுது நெல்லு</u>**



பசிக்க பசிக்க கொடுத்தால் வயிறு கெடாது; வாழ்வும் கெடாது. நெல்லுக்கும் அப்படித் தான். கொடுக்க கொடுக்க தண்ணீரை குடித்துக் கொண்டே இருக்கும். ஆனால் அதையும் அவ்வப்போது காயவிட்டு தண்ணீர் காட்டினாலும் விளைச்சல் கிடைக்கும் என்கிறார் மதுரை மேற்கு ஒன்றியம் குலமங்கலத்தைச் சேர்ந்த விவசாயி செந்தில். ஐந்தாண்டு களாக வானத்தை பார்த்து நெல்லைத் தூவி நஷ்டமில்லாமல் விவசாயம் செய்து வரும் அனுபவத்தை விளக்குகிறார். "மாய்ந்து மாய்ந்து தொலி உழவு செய்து, நெல்லு நாற்று உருவாக்கி அதை எடுத்து நிலத்தில் நட்டு ஆட்கூலி கொடுத்து களையெடுத்து மருந்தடிச்சு அறுவடை செய்றதுக் குள்ள போதும் போதும்னு ஆயிடுது. நான் ராமநாதபுரத்திற்கு கதிர் அடிக்கும் இயந்திரத்தை கொண்டு செல்வேன். அங்கே மானாவாரியில் நெல் அறுவடையை தெரிந்து கொண்டேன். அதையும் செய்து பார்க்கலாம்னு முடிவு பண்ணினேன். விதையை ஊறவைக்கலை. புழுதி உழவு மட்டும் பண்ணி ஏக்கருக்கு 30 விதையை கைவாக்கில் தூவி விட்டேன். மறுபடியும் உழுதப்போ விதையெல்லாம் மெல்ல மண்ணுக்குள்ள மறைஞ்சுருச்சு. அடுத்து எப்ப மழை வருமோ அப்பத்தான் விதை முளைக்கும். சிலநேரம் 20 நாட்கள் கழிச்சு கூட விதை முளைக்கும். இந்த தரம் தூவின ஒரு வாரத்துல மழை வந்துருச்சு. அப்படியே நாற்றாக வளரும். விதைய நேரடியா வயல்ல விதைக்கறதால நாற்று உருவாக்குற

அவசியமில்ல. அதுக்கு ஆட்கூலி, அப்புறம் நாற்றை நடுறதுக்கு ஆட்கூலி தேவையில்லை. அதேபோல அடியுரம், தொழுஉரம் எதுவும் போடல. எட்டு கிலோ உயிர் உரம் மட்டும் போட்டேன். யூரியா, பிற உரம் போடாததால செலவு குறைஞ்சுருச்சு. ரசாயன மருந்தடிக்கல. அந்த செலவும் குறைஞ்சது. கையால தூவுறதால சில இடத்துல அடர்த்தியா நாற்று உருவாகும். அந்த மாதிரி நாற்றை மட்டும் பிடுங்கி எடுத்து இன்னொரு 30 சென்ட் இடத்துல நட்டேன். அது அறுவடைக்கு வர இன்னும் பத்து நாட்களாகும். இந்த முறையில் அக்ஷயா, சீரக சம்பா ரகங்களை சாகுபடி பண்றேன். மத்தவங்களோட நிலத்துல உள்ள நெல்லோட ஒப்பிட்டா என்வயல்ல இப்ப அறுவடைக்கு தயாரா நெல்மணிகள் முற்றி நிக்குது. மத்தவங்க நிலத்துல இன்னும் 20 நாளாகும். இங்க பெரியாறு பாசனம் இருந்தாலும் மானாவாரி முறையில மழையை நம்பி தான் விதை விதைச்சேன். மொத்தமே நாலுதரம் தண்ணி பாய்ச்சியிருக்கேன். மத்ததெல்லாம் மழைத்தண்ணி தான். மழையில்லாதப்ப மண்ணோட ஈரத்தை நம்பி வளருது. கைக்கு நட்டமில்லாம ஏக்கருக்கு 35 மூடை கிடைக்குது. விவசாய உதவி இயக்குனர் செல்வன் வந்து சன்னரக நெல்மணிகளை பார்த்துட்டு பாராட்டுனாரு. ஒருபோக சாகுபடி பண்ற இடத்துல ரெண்டு போக சாகுபடி பண்றேன். இடையில உளுந்து, துவரை ஏதாவது போடுறேன். உரம்போட்டு, நாற்று நட்டு, மருந்தடிச்சு 50 மூடை கிடைக்குறதல இருக்கும் லாபம் 35 மூடையில தாராளமா கிடைக்குது. ரசாயனம் கலக்காத அரிசி உருவாக்குறதுல மனசுக்கும் சந்தோஷமா இருக்கு." இவரிடம் பேச 99435 15514. **எம்.எம்.ஜெயலெட்சுமி, மதுரை.**

## <u>சின்ன சின்ன செய்திகள்</u>



நெல் சாகுபடிக்கு ஒருமுறை பல தானிய விதைப்பு : நெல் சாகுபடி செய்யும் நிலத்தில் ஏக்கருக்கு 20 கிலோ பல தானிய விதைகளை விதைப்பு செய்து 45ம் நாளில் பூவெடுத்தும் மடக்கி உழவு செய்ய வேண்டும். 10 நாட்கள் இடைவெளி கொடுத்து தண்ணீர் கட்டி சேற்று உழவு செய்ய வேண்டும். இப்படி மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை பல தானிய விதைப்பு செய்யும் போது நல்ல பலன் கிடைக்கிறது. வாழையில் ஊடுபயிராக : தட்டைப்பயறு சாகுபடி செய்வது நல்ல பலன் கொடுக்கிறது. வாழைக்கன்றுகளுக்கு இடையே உள்ள காலி இடத்தில் தட்டைப்பயறு விதைக்கலாம். செடி முருங்கையை ஒரு வரிசை விட்டு ஒரு வரிசை நடவு செய்யலாம். தட்டைப்பயறும், செடி முருங்கையும் காற்றில் உள்ள தழைச்சத்தை இழுத்து மண்ணை வளப்படுத்தும். இதன் இலைகள் கால்நடைகளுக்கு நல்ல தீவனமாக அமையும். வாழை நடவு செய்த 4 மாதங்கள் வரை காய்கறி பயிர்களையும் சாகுபடி செய்யலாம். ஊடுபயிராக தர்மபுரி பகுதியில் தக்காளி சாகுபடி செய்வது நடைமுறையில் உள்ளது. முள்ளங்கி, காலி பிளவர், முட்டைகோஸ், மிளகாய், கத்தரி, கருணைக்கிழங்கு, வெண்டை, கீரை, பூசனி மற்றும் செண்டுமல்லி போன்றவைகளை சாகுபடி செய்யலாம். தகவல் : என்.மதுபாலன், தர்மபுரி மாவட்ட வேளாண்துறை உதவி இயக்குநர், தொடர்புக்கு. போன்: 97515 06521. வெண்டையில் ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு : இனக்கவர்ச்சிப்பொறி எக்டருக்கு 12 என்ற எண்ணிக்கையில் வைக்க வேண்டும். காய் புழுக்களால் தாக்கப்பட்ட காய்களை சேர்த்து அழித்து விட வேண்டும். எக்டருக்கு முட்டை ஒட்டுண்ணியான ட்ரைகோ கிரமா ஒரு லட்சம் என்ற எண்ணிக்கையில் விட வேண்டும். வேப்பம் கொட்டைப்பொடி 50 கிராமை ஒரு லிட்டர் நீரில் கரைத்து தெளிக்க வேண்டும். சாம்பல் நிற வண்டை கட்டுப்படுத்த ப்யூரடான் குருணை மருந்து எக்டருக்கு 12 கிலோ இட வேண்டும். நூற்புழு தாக்குதலைத் தடுக்க எக்டருக்கு 400 கிலோ வேப்பம்

புண்ணாக்கு விதைக்கும் போது உரத்துடன் கலந்து இட வேண்டும். அல்லது 1 ஏக்கருக்கு நர்சர் 1 1/2 லிட்டர் + 1 லிட்டர் நீம் அசால் 1000 பிபிஎம். அசுவினிப் பூச்சியைக் கட்டுப்படுத்த லேன்சர் கோல்டு தெளிக்க வேண்டும். வைரஸ் நச்சுயிரி நோயானது வெள்ளை ஈ என்ற பூச்சியால் ஒரு செடியிலிருந்து மற்றொரு செடிக்கு பரப்பப்படுகிறது. இப்பூச்சியைக் கட்டுப்படுத்த 2 மிலி வேம்பு எண்ணை மற்றும் ஒரு லிட்டர் தண்ணீருடன் கலந்து தெளிக்க வேண்டும். உலாலா 8 மிலி / 1 டாங்க் தெளிக்கலாம். பின்பு அவென்ஜர் மருந்தைத் தொடர்ந்து 3 தடவை (1 வார இடைவெளியில்) 25 மிலி / 1 டாங்க் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>கோடைப்பயிர்களுக்கு இலைவழி உரம்</u>



கரும்பு : தழைச்சத்து உர அளவைக் குறைக்க யூரியாவை நீரில் கரைத்து கைத்தெளிப்பான் மூலம் கரும்புப் பயிர் நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும். 25 கிலோ யூரியாவை 275 லிட்டர் தண்ணீரில் கரைத்து கைத்தெளிப்பான் மூலம் இலைகளில் இருமுறை அதாவது நட்ட 90 மற்றும் 100வது நாட்களில் தெளித்தால் நிலத்தில் கரும்புக்குத் தேவையான மேலுரமாக இடப்படும் யூரியாவில் 30 கிலோ சேமிக்கலாம். மேலும் யூரியாவைத் தெளிக்கும் போது மண் ஈரமாக இருப்பது இல்லது. கரும்பில் சோகை நோய் இரும்புச்சத்து பற்றாக்குறையினால் ஏற்படுகிறது. இலைகள் வெளுத்து நரம்புகளுக்கு இடையே பசுமை சோகை அடியிலிருந்து நுனிப்பகுதி வரை நீண்ட கோடுகளாக தென்படும். இவைகள் தான் இரும்புச் சத்துப் பற்றாக்குறையின் அறிகுறிகள். இது போன்ற அறிகுறிகள் பயிரில் தோன்றும் போது 2 சத அன்னபேதி உப்பை 1 கிலோ யூரியாவுடன் 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து பயிர் வளர்ச்சிக்கேற்ற அளவு நீர்க்கரைசலைத் தயாரித்து உபயோகிக்கவும். மேலும் சுண்ணாம்புச் சத்து அதிகம் உள்ள நிலங்களில்

இரும்புச்சத்து உரத்தை இலைவழி மூலமாக தெளிப்பதே சாலச்சிறந்தது. பருத்தி : பருத்தி செடி முளைத்து சுமார் 30 நாட்களான இளம் பருவத்திலும், காய் முதிர்ந்த நிலையிலும் செம்பட்டை எனப்படும் சிவப்பு இலைகள் தோன்றக்கூடும். இது மக்னீசியம் பற்றாக்குறையினால் ஏற்படுகிறது. வயலில் தண்ணீர் தேங்குவதாலும், மண்ணில் சாம்பல் சத்து அளவு அதிகரிக்கும் போதும் இக்குறைபாடு ஏற்படுகிறது. மேலும் இலைகளில் நரம்புகள் பசுமை நிறத்துடனும், நரம்புகளுக்கு இடையிலுள்ள பகுதிகள் செந்நிறமாகவும் காணப்படும். முற்றிய நிலையில் இலைக்காம்பு தண்டு சிவப்பாக காணப்படும். இதனால் பருத்தியின் வளர்ச்சி குன்றி விளைச்சலும் குறைகிறது. இதனை நீக்க 500 கிராம் மக்னீசியம் சல்பேட்டையும் 100 லிட்டர் நீரில் கரைத்து இலைகளின் மீது நன்கு நனையும்படி காலை அல்லது மாலை வேளைகளில் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். நிலக்கடலை : நிலக்கடலையில் முக்கியமாக விழுது இறங்கிய பின்பும் காய் பிடிக்காமல் போகும். இது பெரும்பாலும் போரான் என்னும் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையினால் ஏற்படும் விளைவாகும். இதை நிவர்த்தி செய்ய 0.2 சத போராக்ஸ், ஒரு சத பொட்டாஷ் மற்றும் 0.5 சத யூரியா நீர்க்கரைசலை விதைத்த 30 மற்றும் 40 நாட்களில் இரண்டுமுறை தெளிக்க வேண்டும். (400 கிராம் போராக்ஸ், 2 கிலோ பொட்டாஷ் மற்றும் 1 கிலோ யூரியாவை 200 லிட்டர் தண்ணீரில் கரைக்க வேண்டும்). பயறுவகைப் பயிர்கள் : தழை, மணி மற்றும் சாம்பல் சத்தை அளிக்கக்கூடிய வகையில் 2 சத டிஏபி மற்றும் 1சத பொட்டாஷ் உரக்கரைசலை பூக்கும் தருணத்திலும் பின் 15 நாட்கள் கழித்தும் இருமுறை மாலை வேளையில் தெளிப்பதால் பயிர்களும் வறட்சியை தாங்கி நன்கு வளர்ந்து விளைச்சல் அதிகரிக்கிறது. ஒரே ஒருமுறை தான் இலை வழியாக தெளிக்க முடியுமென்றால் அதே பூக்கும் தருணத்தில் தெளிப்பது மிகச் சிறந்ததாகும். – **முனைவர் கொ.பாலகிருஷ்ணன்**

**பேராசிரியர்மற்றும்தலைவர், வேளாண்மைக்கல்லூரி மற்றும்ஆராய்ச்சிநிலையம், மதுரை-625 104.**

## பொங்கலுக்காக விவசாயிகளுக்கு அழைப்பு! உழவர் சந்தையில் விற்பனை ஏற்பாடு

ஈரோடு : பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, ஈரோடு மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில், அதிகளவில் காய்கறிகளை கொண்டு வந்து, விவசாயிகள் பயனடைய வேண்டும், என, வேளாண் வணிகத்துறை அழைப்பு விடுத்துள்ளனர். ஒருங்கிணைந்த ஈரோடு மாவட்டத்தில், தாராபுரம், காங்கேயம், பெருந்துறை, சத்தியமங்கலம், ஈரோடு சம்பத் நகர், பெரியார் நகர் உள்ளிட்ட ஐந்து இடங்களில், உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன. மற்ற சந்தைகளை காட்டிலும், சம்பத் நகரில் நுகர்வோர் வரத்து அதிகம் என்பதால், கடைகளில், 100, தரைப்பகுதிகளில், 60 என மொத்தம், 160 விவசாயிகள் கடை விரித்துள்ளனர்.பெரியார் நகர் உழவர் சந்தையில், 40க்கும் மேற்பட்ட கடைகளும் உள்ளன.பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, விவசாயிகள் உற்பத்தி செய்த காய்கறிகள், பழங்களை அதிகளவில் கொண்டு வந்து விற்பனை செய்து, பயனடைய வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, சம்பத் நகர் உழவர் சந்தை நிர்வாக அலுவலர் குணசேகரன் கூறியதாவது: உழவர் சந்தைகளில், சுற்றுப்புறப்பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், அதிகளவில் காய்கறிகளை கொண்டு வரத்துவங்கி உள்ளனர். வழக்கமாக, 19 முதல், 20 டன் காய்கறிகள், பழங்கள், சம்பத் நகர் உழவர் சந்தைக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படும். கடந்த இரண்டு நாட்களாக, 21 டன் வந்துள்ளன.இன்று, (14ம் தேதி), 25 டன் காய்கறிகள், பழங்களை விவசாயிகள் விற்பனைக்காக கொண்டு வருவர் என எதிர்பார்க்கிறோம். பீர்க்கை, தக்காளி, வெண்டை, பீட்ரூட், பீன்ஸ், கேரட் உள்ளிட்ட அனைத்து காய்கறிகளின் வரத்தும், கடந்த வாரத்தை காட்டிலும், ஐந்து

முதல், பத்து சதவீதம் வரை அதிகரித்துள்ளது, என்றார். அனைத்து சந்தைகளுக்கும், விவசாயிகள் தங்களது சந்தை பொருட்களை கொண்டு செல்ல, இலவச பஸ் வசதி, எலக்ட்ரானிக் தராசு, சரக்குகளை வைக்க குடோன் வசதி உள்ளது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், உதவி வேளாண் விற்பனை அலுவலர்கள் குழு, ஈரோட்டின், சுற்றுப்புற கிராமங்கள், மொடக்குறிச்சி, கொடுமுடி, பூந்துறை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்றனர். விவசாயிகளிடம், உழவர் சந்தையில் பொருட்களை விற்பனை செய்வதால் ஏற்படும் பயன் குறித்து எடுத்து கூறி வருகின்றனர், என, வேளாண் விற்பனை மற்றும் வணிகப்பிரிவு இணை இயக்குனர் சுப்பிரமணியம் தெரிவித்தார்.

## <u>பர்கூர் இன மாடுகள் பராமரிப்பு அவசியம்; கால்நடைத்துறை இணை இயக்குனர் விளக்கம்</u>

ஈரோடு : பர்கூர் இனமாடுகளை கட்டாயம் பராமரிப்பது அவசியம், என, ஈரோடு கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் ஜெயராமன் தெரிவித்தார். இதுகுறித்து, மண்டல இணை இயக்குனர் கூறியதாவது: நாட்டின மாடுகளின் வளர்ப்பு, நம் மக்களிடையே வெகுவாக குறைந்து வருகிறது. அதனை பாதுகாக்க தவறியதுடன், பல்வேறு வெளிநாட்டின மாடுகளின் எண்ணிக்கையும், பல மடங்கு, தமிழகத்தில் மட்டுமல்லாது, இந்திய அளவில் அதிகரித்து வருகிறது.தமிழகத்தில் காங்கேயம், பர்கூர், உம்பளாச்சேரி போன்ற நாட்டின மாடுகளை பாதுகாப்பதற்கு, போதுமான காரணங்கள் உண்டு. பர்கூர் இன மாட்டினங்கள், எவ்வித கடினமான சூழ்நிலைகளிலும் உழைக்க கூடியவை. வேலைத்திறனையும், உற்பத்தி திறனையும் கொடுக்க வல்லது. மற்ற வெளிநாட்டு மாட்டினங்கள் போல், கொட்டகை வசதிகள் ஏதும் தேவையில்லை. அடர்ந்த காடுகளில் நல்ல முறையில் வளரக்கூடியது.வெளிநாட்டு மாட்டினங்களுக்கு, அதன் உற்பத்தி திறனுக்கு ஏற்றார்போல்,

தேவையான தீவனங்கள் சரி விகிதத்தில் அளித்தால் மட்டுமே, உற்பத்தி திறனை எதிர்பார்க்க முடியும். ஆனால், பர்கூர் இன மாடுகள், அடர்ந்த காடுகளில் இருக்கும் புற்களும் மற்றும் இழை, தழைகளை உட்கொண்டு, நன்கு வாழ்வதுடன், அதனை பால் மற்றும் இறைச்சியாக மாற்றும் திறமை கொண்டது. பர்கூர் இனமாடுகளில், வழிவழியாக இயற்கை மருத்துவ முறைகளை கொண்டே, அதற்கு ஏற்படும் உடல் நலக்குறை களை சரி செய்யப்படுகின்றன. எவ்வித செலவு ஏற்படுத்தும் மருத்துவ முறைகள் தேவைப்படுவதில்லை. மற்ற மாடுகளுக்கு ஏற்படும் நோய்கள், பர்கூர் இனமாடுகளுக்கு ஏற்படுவதில்லை. இயற்கையாக கிடைக்கும் தாவரங்கள் மற்றும் புற்களை உண்டு வாழ்வதால், இயல்பாகவே நோய் எதிர்ப்பு திறன் அதிகம் உள்ளது.மேலும், கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் நோய் எதிர்ப்பு தடுப்பூசி போடுவதால், நோய் எதிர்ப்பு திறன் மேலும் அதிகரிக்கும். பர்கூர் இனமாடுகளில் சினை பிடிக்காமை, கன்று ஈன்றுவதில் குறைபாடுகள் ஏற்படுவதில்லை. மேலும் பசுக்களில் பொலிக்காளைகளை பயன்படுத்தியே, இனப்பெருக்கம் செய்யப்படு கின்றன. ஒவ்வொரு பட்டியலிலும், மூன்று முதல், நான்கு பொலிக் காளைகளை இனப்பெருக்கத்துக்காக பயன்படுத்துகின்றன. இளம் கிடாரிகளை விற்பனை செய்யப்படுவதில்லை. பர்கூர் இனமாடுகளில் எவ்வித செலவும் செய்யாமல், தேவையான வேலைத்திறன், மொத்த செலவினம் மிகவும் குறைவு. காடுகளில் கிடைக்கும் தீவனப்புல், கேழ்வரகு மற்றும் மக்காசோளம் உபபொருட்கள் மூலம் கிடைக்கும் சத்துகளை பயன்படுத்தி கொள்கிறது.இவ்வித மாடுகள் சிறந்த நோய் எதிர்ப்பு திறன் கொண்டது. உறுதியான மற்றும் நிலையான வேலைத்திறன் கொண்டது. வறண்ட சூழ்நிலையிலும் வாழக்கூடியது. பொதுவாக உழவுக்கும், வண்டி இழுப்பதற்கும், பிற வேலைகளுக்கும் பயன்படுத்துவதால், பராமரித்து பாதுகாப்பது அவசியம். இதன் சாணம் வயல்களுக்கு சிறந்த உரமாகவும் பயன்படுகிறது. இவற்றை

பாதுகாத்தால், குறைந்த செலவில், விவசாயிகள் பயன்பெற முடியும். பிற கலப்பினங்களைவிட, இவை கூடுதல் பலன் தரும்.இவ்வாறு அவர் கூறினார்.

**இயந்திரம் மூலம் நெல் அறுவடை; சத்தி பகுதியில் பணிகள் தீவிரம்**

சத்தியமங்கலம் : சத்தியமங்கலம் பகுதியில், இயந்திரம் மூலம் நெற்பயிர் அறுவடை செய்யும் பணி, தீவிரமாக நடந்து வருகிறது. கடந்த ஆகஸ்ட், 15ம் தேதி, பவானிசாகர் அணையில் இருந்து, கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டது.இதனால், சத்தியமங்கலம் மற்றும் கீழ்பவானி வாய்க்கால் பாசன பகுதியில், நடப்பு ஆண்டில் ஒரு லட்சம் ஏக்கருக்கு மேல் விவசாயிகள் நெற்பயிர் நடவு செய்தனர்.இந்த நெற்பயிர், தற்போது நன்றாக விளைந்து, அறுவடைக்கு தயாராக உள்ளது. ஆனால், அரசின், 100 நாள் வேலை திட்டத்தினாலும், திருப்பூர் பகுதிகளில் உள்ள நூற்பாலை நிர்வாகத்தினர், சத்தியமங்கலம் பகுதிக்கு பஸ் அனுப்பி நூற்பாலை பணிக்கு, ஆட்களை அழைத்து செல்வதாலும், கர்நாடகா மாநிலத்தில் மஞ்சள் அறுவடை பணிக்கு, சத்தியமங்கலம் பகுதியில் இருந்து கூலியாட்கள் சென்ற காரணத்தாலும், நெற்பயிர் அறுவடைக்கு ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டது.இதனால், தற்போது, இயந்திரம் மூலம் நெற்பயிர் அறுவடை செய்யும் பணி, சத்தியமங்கலம் பகுதியில் வேகமாக நடந்து வருகிறது. இருப்பினும், வாய்க்கால் கரையோரத்தில், வயல்வெளியில் தண்ணீர் தேங்கி நிற்கும் வயல்களில், இயந்திரம் மூலம் அறுவடை செய்வது, மிகவும் கடினமாக இருப்பதால், ஆட்களை கொண்டு அறுவடை செய்யவே, இப்பகுதி விவசாயிகள் விரும்புகின்றனர்.இருந்தாலும், ஈரமில்லாமல் காய்ந்து கிடக்கும் வயல்களில், ஆட்களை விட இயந்திரம் மூலம் அறுவடை செய்வதே

எளிதாகவும், அறுவடை செலவு குறைவாகவும் இருப்பதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.இயந்திரம் மூலம் அறுவடை செய்ய, ஒரு மணி நேரத்துக்கு, 1,500 முதல், 1,700 ரூபாய் வரை செலவாகிறது.ஒரு ஏக்கர் நெற்பயிர் அறுவடை செய்ய, சிறிய வயலாக இருந்தால், இரண்டு மணி நேரமும், பெரிய வயலாக இருந்தால், ஒரு மணி நேரத்தில் அறுவடை முடிக்கப்படுகிறது.

**<u>ஆர்தோடக்ஸ் தேயிலை தூளுக்கு கிராக்கி</u>**

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏல மையத்தில் ஆர்தோடக்ஸ் தேயிலை தூளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. குன்னூர் தேயிலை ஏல மையத்தில் வாரத்தில் இரண்டு நாட்கள் தேயிலை ஏலம் நடக்கிறது. இந்த வார ஏலத்தில், 16.91 லட்சம் கிலோ தேயிலை தூள் ஏலத்திற்கு வந்தது. இந்த ஏலத்தில்,80 சதவீதம் அளவுக்கு தேயிலை தூள் விற்கப்பட்டது. சி.டிசி., தேயிலை தூளில் அதிகபட்ச விலையாக கிலோவுக்கு, 219 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூளுக்கு கிராக்கி ஏற்பட்டதால் அதிகபட்சம், 265 ரூபாய்க்கு விற்கப்பட்டது. சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு, 40 ரூபாயிலிருந்து, 44 ரூபாய் வரையிலும், முதல் ரக தேயிலை தூள் கிலோவுக்கு, 90 ரூபாயில் இருந்து, 160 ரூபாய் வரையிலும் ஏலத்திற்கு சென்றது. டஸ்ட்ரக தேயிலை தூளின் சாதாரண வகை கிலோவுக்கு, 45 ரூபாயில் இருந்து, 54 ரூபாய் வரையிலும், முதல் ரக தேயிலை தூள் கிலோவுக்கு,110 ரூபாயில் இருந்து,190 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. உள் நாட்டு, வெளிநாட்டு வர்த்தகர்கள் ஆர்தோடக்ஸ் தேயிலை தூளை வாங்க ஆர்வம் காட்டியதால் கிராக்கி ஏற்பட்டு, அதிகபட்சம், 265 ரூபாய்க்கு விற்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. பனிபொழிவால் இலை வரத்து குறைந்ததால், ஏல மையங்களில் அனைத்து ரக தேயிலை தூள் விற்கப்பட்டு வருகிறது. அடுத்த ஏலத்திற்காக, 12 லட்சம் தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள்ளது.

## காந்தி மார்க்கெட்டில் குவிந்த வாழைத்தார்கள்

திருச்சி: பொங்கல் திருநாளை முன்னிட்டு, திருச்சி காந்தி மார்க்கெட்டில், பல்வேறு ரக வாழைத்தார்கள் விற்பனைக்கு குவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து, வியாபாரி சக்திவேல் கூறியதாவது:

திருச்சி மாவட்டத்தில் தொட்டியம், அழகரை, மணல்மேடு, முசிறி, கோடியம்பாளையம், சீனிவாசநல்லூர், நொச்சியம், பெட்டவாய்த்தலை, லாலாப்பேட்டை, நாமகிரிபேட்டை, சத்தியமங்லம், திருக்காட்டுப்பள்ளி, பூதலூர், கல்லணை உள்ளிட்ட ஊர்களில் இருந்து, திருச்சி மார்க்கெட் டுக்கு நாள்தோறும் வாழைத்தார்கள் வருகிறது. எப்போதும் இல்லாத அளவுக்கு, இந்தாண்டு நல்ல மழை பெய்ததாலும், காவிரியில் தொடர்ந்து தண்ணீர் வருவதாலும், வாழை விளைச்சல் அதிகரித்துள்ளது. திருச்சி காந்தி மார்க்கெட்டுக்கும், வாழைத்தார் வரத்து அதிகரித்துள்ளது. இங்கு செவ்வாழை, 300 முதல், 600 ரூபாய் வரையிலும், ரஸ்தாளி, 300, பூவன், 250, கற்பூரவல்லி, 500, நாட்டுப்பழம், 10 தார்கள், 1,000 ரூபாய்க்கும், பச்சலாடம், 250, ஏழரசி, 75, பச்சைவாழை, 250 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்படுகிறது. நேந்திரம் பழங்கள் குறைந்த அளவிலேயே விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறுஅவர்தெரிவித்தார்.

## தர்பூசணி சாகுபடி இலவச பயிற்சி

நாமக்கல் : "வீரிய ஒட்டுரக தர்பூசணி சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த இலவச பயிற்சி, நாமக்கல் வேளாண் விற்பனை நிலையத்தில், வரும், 22ம் தேதி நடக்கிறது' என, திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல்-மோகனூர் சாலையில் உள்ள, வேளாண் அறிவியல் நிலையத்தில், வீரிய ஒட்டுரக தர்பூசணி சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்த இலவச பயிற்சி நடக்கிறது. அதற்காக, தர்பூசணியில் உள்ள உயர்ரகங்கள், நாற்றங்கால் மேலாண்மை, நடும் பருவம், நடவுமுறை, பாலீதின் நிலப்போர்வை,

சொட்டுநீர்பாசனம், நீர்வளி உரமளித்தல், உர நிர்வாகம், களை நிர்வாகம், ஊட்டச்சத்து குறைபாடு நிவர்த்தி செய்தல், பூச்சி நோய் தடுப்பு நிர்வாக பயிற்சி ஆகியன இலவசமாக வழங்கப்படும். எனவே, பயிற்சியில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள், வரும், 20ம் தேதிக்குள், 04286 - 266 244, 266 345 என்ற எண்களில், முன்பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளி, பென்னாகரம்வாரச்சந்தைகளில் ரூ.1.50 கோடி வர்த்தகம்

தர்மபுரி:பொங்கல் திருநாளை ஒட்டி, தர்மபுரி மாவட்டத்தில் நேற்று நடந்த வார சந்தைகளில், பொங்கல் பானை, கரும்பு, வெல்லம் மற்றும் கரி நாளுக்கு ஆடுகள் வாங்க அதிகளவில் மக்கள் குவிந்தனர். தமிழர் திருநாளான பொங்கல் திருநாள், விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்படுவது வழக்கம். பொங்கல் திருநாளை கொண்டாட, வெளி மாவட்டங்கள் மற்றும் வெளிமாநிலங்களுக்கு கூலி வேலை உள்ளிட்டவற்று சென்ற மக்கள் கடந்த சில தினங்களாக, தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள தங்களது சொந்த ஊருக்கு வந்த வண்ணம் உள்ளனர். இந்நிலையில், நாளை, பொங்கல் திருநாள் கொண்டாடப்பட உள்ளதை அடுத்து, நேற்று தர்மபுரி மாவட்டத்தின் மிகபெரிய சந்தைகளான நல்லம்பள்ளி சந்தை மற்றும் பென்னாகரம் செவ்வாய் சந்தை கூடியது. இதில், பொங்கலுக்கு தேவையான புது மண் பானை மற்றும் கரும்பு, வெல்லம், பாசிபருப்பு மற்றும் காலநடைகளுக்கு தேவையான புதுகயிறு உள்ளிட்டவையும், காப்பு கட்டுக்கு தேவையான, பூலாம் பூ, ஆவாரம் பூ கட்டு ஆகியவை விற்பனைக்கு குவிக்கப் பட்டிருந்தது. குறிப்பாக, நல்லம்பள்ளி, பென்னாகரம் சந்தைகளில், 50 ரூபாய் முதல், 400 ரூபாய் வரையிலான பொங்கல் தனி பானை மற்றும் அடுக்கு பானைகளை, பொதுமக்கள் ஆர்வத்துடன் தேர்வு செய்து வாங்கி சென்றனர். இதே போன்று, ஜோடி , 60 ரூபாய் முதல், 70 ரூபாய் வரை

விற்பனை செய்யப்பட்ட கரும்புகளையும், வாங்கி சென்றனர்.மேலும், பொங்கலுக்கு தேவையான வெல்லம், பாசிபருப்பு, முந்திரி, திராட்சை, ஏலக்காய் மற்றும் சர்க்கரை பூசணி காய் உள்ளிட்டவைகளையும், கால்நடைகளுக்கு தேவையான புது கயிறு, மணி உள்ளிட்டவைகளை தேர்வு செய்து வாங்கி சென்றனர்.குறிப்பாக, கரி நாளுக்கு, இரண்டு நாட்களுக்கு முன் நேற்று கூடிய நல்லம்பள்ளி, பென்னாகரம் சந்தைகளுக்கு, தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், சேலம் மாவட்டம், கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்தும் அதிகளவில் ஆடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இச்சந்தைகளில், 3,500 ரூபாய் முதல், 28,000ம் ரூபாய் வரை, ஆடுகள் விற்பனை செய்யப்பட்டது. பொங்கல் திருநாளை முன்னிட்டு, நேற்று நல்லம்பள்ளி, பென்னாகரம் சந்தைகளில் பொதுமக்கள் அதிகளவில் கூடி, பொங்கல் பானை மற்றும் பொருட்களை வாங்கி சென்றதில், இச்சந்தைகளில், ஒரு கோடியே, 50 லட்ச ரூபாய்க்கு மேல் பொருட்கள் மற்றும் ஆடுகள் உள்ளிட்டவை விற்பனை ஆனதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## <u>ராஜபாளையத்தில் தேனி கரும்பு</u>

ராஜபாளையம் : பொங்கல்விழாவை முன்னிட்டு ராஜபாளையம் மார்க்கெட்டிற்கு தேனி மாவட்டத்தில் இருந்து கரும்புகள் விற்பனைக்கு வந்துள்ளன. ராஜபாளையத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய மழை இல்லை. நெல், கரும்பு விவசாயம் பாதிக்கப்பட்டது. கிடைத்த கிணற்று தண்ணீரில் காய்கறி விவசாயம் நடந்தது. பொங்கல்விழாவிற்கு கரும்பு விற்பனை இங்கு அதிகம் இருக்கும் என்பதால், தேனி மாவட்டம் தேவதானம் காமாட்சியம்மன்கோயில் பகுதி, சின்னமனூர், மதுரை மேலூர் போன்ற பகுதிகளில் இருந்து கரும்புகள் ராஜபாளையத்திற்கு வந்து உள்ளன. தேவதானத்தை சேர்ந்த விவசாயி அக்பர் கூறுகையில், ""கடந்த ஆண்டு கடைசிநேரத்தில் ராஜபாளையம் வந்தோம். ஓரளவிற்கு

விற்பனை இருந்தது. இந்த முறை முன் கூட்டியே வந்துவிட்டோம். கட்டு 250 முதல் 300 ரூபாய்க்கு எடுக்கின்றனர்," என்றார். கரும்பு வாங்கி சென்ற ஒருவர் கூறுகையில், ""15 கரும்பு உள்ள கட்டு 350 ரூபாய்க்கும், 10 கட்டு உள்ள கரும்பு 300 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. கடந்த ஆண்டை விட இது குறைவு," என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கோயம்பேடு மார்க்கெட்டுக்கு கரும்பு வரத்து அதிகரிப்பு</u>**



அண்ணாநகர்: பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மதுரை, கடலூர், பண்ருட்டி, சிதம்பரம், சேத்தியாதோப்பு மற்றும் சேலம், தேனி உள்ளிட்ட பல பகுதிகளில் இருந்து சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு கரும்புகள் வருகின்றன.சில நாட்களுக்கு முன் வரத்தொடங்கிய கரும்பு லாரிகள் படிப்படியாக அதிகரித்து நேற்று 150 லாரிகள் வந்தன. தவிர பூஜைக்கு பயன்படும் இஞ்சி கொத்து, மஞ்சள் கொத்துகளும் வர துவங்கியுள்ளன. மதுரையில் இருந்து 10 லாரிகளில் வந்த கரும்புகள் உடனடியாக விற்று தீர்ந்தன. மதுரை கரும்பு தரத்திற்கு ஏற்ப (15 கரும்புகள்) ஒரு கட்டு ரூ.300 முதல் ரூ.400 வரை விற்கப்படுகிறது. மற்ற பகுதிகளில் இருந்து வந்த கரும்புகள் ரூ.200 முதல் ரூ.300 வரை விற்கப்படுகிறது. இஞ்சி 10 எண்ணிக்கை கொண்ட ஒரு கட்டு ரூ.50 முதல் ரூ.100 வரையும், மஞ்சள் கொத்து 10 எண்ணிக்கை கொண்ட ஒரு கட்டு ரூ.60 முதல் ரூ.100 வரையும் விற்பனை செய்யப்படுகிறது. இதுகுறித்து, வியாபாரி ஒருவர் கூறுகையில், கரும்பு விளைச்சல் கடந்த ஆண்டை விட இந்தாண்டு அதிகரித்துள்ளது. அதனால் வரத்தும்

அதிகரிக் கும். கடந்த ஆண்டு மொத் தம் 700 லாரிகளில் வந்த கரும்பு இந்தாண்டு 1000 லாரி வரை வரக்கூடும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

**<u>பொங்கல் பண்டிகையையொட்டி ராயக்கோட்டை சந்தைக்கு காய்கறி வரத்து அதிகரிப்பு</u>**

ராயக்கோட்டை, : கிருஷ்ணகிரி மாவட்டம் ராயக்கோட்டையில் கூடும் தினசரி சந்தை பிரசித்தம். ராயக்கோட்டை தக்காளிக்கு நல்ல மவுசு உள்ளதால் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும், வெளி மாநிலங்களிலிருந்தும் வியாபாரிகள் கொள்முதலுக்காக வருவது வழக்கம். இந்நிலையில், ராயக்கோட்டை சந்தைக்கு காய்கறிகளின் வரத்து அதிகரித்துள்ளது. பொங்கல் பண்டிகையையொட்டி ராயக்கேட்டை மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் குறுகியகால பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட அவரை, துவரை, பூசணி, கத்தரிக்காய், வெண்டைக்காய், முள்ளங்கி, முட்டைகோஸ், கேரட், பீட்ரூட், காலிபிளவர், வள்ளி கிழங்கு முதல் காட்டு நெல்லி வரை விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். இதனால், வழக்கத்தைவிட ராயக்கோட்டை சந்தை களை கட்டி வருகிறது. நாள் ஒன்றுக்கு தலா 25 கிலோ எடை கொண்ட 2000 பெட்டி தக்காளி வரத்து உள்ள நிலையில், வெளியிடங்களிலிருந்து வரக்கூடிய வியாபாரிகளின் வரத்து சரிந்துள்ளதால் விலை குறைந்துள்ளது. இந்நிலையில், காய்கறிகளின் விற்பனை சூடுபிடித்துள்ளது ஆறுதல் தருவதாக உள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

**<u>அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாய விளை பொருள் ரூ.28.25 லட்சத்திற்கு ஏலம்</u>**

அந்தியூர், : அந்தியூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வாரந்தோறும் திங்களன்று விவசாய விளை பொருட்கள் ஏல விற்பனை நடைபெறும். அதன்படி நேற்று நடந்த ஏல விற்பனையில் 25 ஆயிரம் தேங்காய்

விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. இதில், தேங்காய் ஒன்று ரூ.4.50 முதல் ரூ.15 வரை மொத்தம் ரூ.2 லட்சத்து 50 ஆயிரத்திற்கு ஏலம் போனது. தேங்காய் பருப்பு 100 மூட்டைகள் கொண்டு வரப்பட்டன. இதில் கிலோ ரூ.70.76 முதல் ரூ.94.75 வரை ரூ.2.75 லட்சத்திற்கு ஏலம் போனது. வெள்ளை எள் 20 மூட்டைகள் கிலோ ரூ.71.19 முதல் ரூ.105.95 வரை ரூ.10 லட்சத்திற்கு ஏலம் போனது. மக்காச்சோளம் 100 மூட்டை கிலோ ரூ.10.73 முதல் ரூ.11.17 வரை ஒரு லட்சத்திற்கு ஏலம் போனது. நிலக்கடலை 700 மூட்டை விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. காய்ந்த நிலக்கடலை கிலோ ரூ.37.18 முதல் ரூ.48.01 வரை ரூ.12 லட்சத்துத்துக்கு ஏலம் போனது. விற்பனை கூடத்தில் மொத்த விவசாய விளை பொருட்கள் ரூ.28.25 லட்சத்திற்கு ஏலம் போனது.

## <u>கணியூர்-கல்லாபுரம்-மடத்துக்குளத்தில் அரசு நெல் கொள்முதல் நிலையம் திறப்பு</u>

உடுமலை, : திருப்பூர் மாவட்டம் உடுமலை, மடத்துக்குளம் தாலுகாவில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்த காரணத்தால் எதிர்பார்த்த அளவிற்கு நெல்சாகுபடி நடைபெற வில்லை. நடப்பாண்டில் பருவமழை நன்றாக பெய்து அணைகள் நிரம்பியதால் இப்பகுதியில் சுமார் 3500 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இதில் சன்னரக மற்றும் மோட்டா ரக நெல் ரகங்களை விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டிருந்தனர். தற்போது அறுவடை நடந்து கொண்டிருப்பதால் மகசூல் அதிகமான காரணத்தால் இடைதரகர்கள் தலையீடு அதிகமாக உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. விவசாயிகள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை துவக்க உத்தரவிட்டது. இதன்படி திருப்பூர் மாவட்டத்தில் 13 இடங்களில் கொள்முதல் நிலையங்களை திறக்க உத்தரவிட்டு நேற்று கணியூர், மடத்துக்குளம், கல்லாபுரம் உள்ளிட்ட 9

இடங்களில் நேரடி கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டது. இதில் பொள்ளாச்சி எம்.பி. மகேந்திரன், மடத்துக்குளம் எம்எல்ஏ சண்முகவேலு, நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர் குமுதம், கொள்முதல் அலுவலர்கள் பாலசுப்பிரமணியன், தங்கராஜ், சவுகத்அலி ஆகியோர் கலந்துகொண்டனர். நேரடி கொள்முதல் நிலையத்தில் ஏ கிரேடு நெல் வகைகளுக்கு குவிண்டால் ஒன்றுக்கு குறைந்த பட்ச ஆதார விலையாக ரூ.1400ம், ஊககத் தொகையாக ரூ.70ம் சேர்த்து ரூ.1470ம், மோட்டா ரக நெல்லுக்கு குவிண்டாலுககு ரூ.1360ம், ஊக்கத் தொகையாக ரூ.50 சேர்த்து ரூ.1400ம் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நேரடி கொள்முதல் நிலையங்கள் மூலம் கடந்த 2010-2011ம் ஆண்டில் திருப்பூர் மாவட்டத்தில் 25 ஆயிரம் மெட்ரிக் டன் நெல்லும், 2011-2012ம் ஆண்டில் 22,600 மெட்ரிக் டன் நெல்லும், 2012-2013ம் ஆண்டில் 4500 டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு வறட்சி காரணமாக நெல்கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படவில்லை. இந்த ஆண்டு 25 ஆயிரம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்ய வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**புன்செய் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு கீழ்பவானி விவசாயிகள் மகிழ்ச்சி**

ஈரோடு,: பவானிசாகர் அணையில் இருந்து நடப்பு முதலாம் மண்டலத்துக்குட்பட்ட ஒரு லட்சத்து 3500 ஏக்கர் நிலங்களின் புன்செய் பாசனத்துக்காக கீழ்பவானி வாய்க்காலில் கடந்த 10ம் தேதி முதல் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இத்தண்ணீர் திறப்பால் கீழ்பவானி புன்செய் பாசன விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நடப்பாண்டில் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 82 அடிக்கும் மேல் உள்ளதால் கட்டாயம் புன்செய் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படும் என்ற நம்பிக்கையில் கடந்த மாதம் பெய்தவடகிழக்கு பருவமழையை பயன்படுத்தி எள், நிலக்கடலை, ராகி, சோளம், மக்காச்சோளம் போன்ற

பயிர்களை விவசாயிகள் விதைப்பு செய்திருந்தனர். சில விவசாயிகள் இம்மாத துவக்கத்தில் விதைப்பு செய்ய துவங்கியிருந்த நிலையில் தற்போது கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறந்துள்ளதால் மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் தற்போது புன்செய் பாசன பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக தொப்பம்பாளையம், சென்னிமலை, அறச்சலூர், அவல்பூந்துறை, கவுந்தப்பாடி, நசியனூர், பெருந்துறை, எழுமாத்தூர், விளக்கேத்தி, வெள்ளோடு போன்ற பகுதிகளில் விவசாயிகள் ஆர்வத்துடன் எள், நிலக்கடலை சாகுபடியில் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர். ஒரு சில இடங்களில் ஆமணக்கு, மக்காச்சோளம், ராகி, சோளம் போன்ற மானாவாரி பயிர்களையும் சாகுபடி செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: கடந்த 2013-14ம் பாசன ஆண்டில் நிலவிய கடும் வறட்சியால் புன்செய் பாசனத்துக்கு போதிய நீர் கிடைக்கவில்லை. எனவே கடந்த ஆண்டு பாசனம் பெரிதும் பாதிப்படைந்தது. இந்த ஆண்டு பரவலாகவே தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை பெய்ததால் ஈரோடு மாவட்டம் முழுவதும் பரவலாகவே நன்செய் பாசனம் மட்டுமின்றி தற்போது புன்செய் பாசன நிலங்களிலும் வேளாண் பணிகள் சுறுசுறுப்படைந்துள்ளன. 2 ஆண்டுகளுக்கு பிறகு கிணற்றிலும் போதிய நீர் இருப்பு உள்ள நிலையில், தற்போது புன்செய் பாசனத்துக்கும் கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. வேளாண் பணிகள் சுறுசுறுப்படைந்துள்ளதால் விவசாயிகளுக்கு பயிர்கடன் வழங்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் முன்வர வேண்டும். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## லால்குடியில் குலை நோய் பாதித்த பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம்

லால்குடி, : லால்குடி பகுதியில் குலை நோய்த் தாக்குதலால் பாதிக்கப்பட்ட நெற் பயிர்களுக்கு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வீதம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று வாய்க் கால் பாசன விவசாயிகள்

ஆர்ப்பாட்டம் நடத்தினர். லால்குடி தாலுகா அலுவலகம் முன்பாக நடை பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு கீழ்பெருவளை வாய்க்கால் முதலாவது பாசனதாரர்கள் சபை தலைவர் தங்கராஜ் தலை மை வகித்தார். செயலாளர் செல்லப்பா, பொருளாளர் மணிவேல், முன்னாள் தலைவர் சேவியர், ராமகிருஷ்ணன், சின்னப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளாகப் பங்கேற்ற விவசாயிகள் பேசியதாவது: தற்போது சம்பா சாகுபடி செய்த நெற்பயிர்களை குலை நோய்த் தாக்கியுள்ள தால் சுமார் 14 ஆயிரம் ஏக் கர் அளவுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, ஒரு போகச் சாகுபடி செய்த நெற்பயிர்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே, குலை நோய்த் தாக்குதலுக்கு உள்ளான நெற் பயிற்களுக்கு ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வீதம் நிவாரணம் வழங்க வேண் டும். நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2 ஆயிரம் வழங்க வேண்டும். சம்பா அறுவடை தீவிரமடைந்துள்தால் அரசின் நெல் கொள்முதல் நிலையங்களை 15ம் தேதிக்குள் திறக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷமிட்டனர். ஆர்ப்பாட்டத்தில் அய் யன் வாய்க்கால் பாசனதாரர்கள் சங்கத் தலைவர் வீரசேகரன், தங்கமணி மற்றும் கீழ்பெருவளை வாய்க்கால் முதலாவது பாசனதாரர் கள் சபை, மேல்பெருவளை வாய்க்கால் பாசனதாரர் கள் சபை, பங்குனி வாய்க் கால் கடை மடை பாசனதாரர்கள் சபை நிர்வாகிகள் என திரளானோர் பங்கேற்றனர். இதைத் தொடர்ந்து, இதுகுறித்த கோரிக்கை மனுவை லால்குடி சப்- கலெக்டர் ஜெயசந்திரபானுரெட்டி, தாசில்தார் ஞான வேல் ஆகியோரிடம் அளித்தனர். முன்னதாக, லால்குடி உழவர் மன்றங்களின் கூட்டமைப்பு தலைவர் முத்தமிழ்ச்செல்வன் வரவேற் றார். முடிவில் செயலாளர் ரமேஷ் நன்றி கூறினார்.

## வாழை அடர்நடவில் சாதனை விவசாயிக்கு பாராட்டு

குளித்தலை, : குளித்தலை அடுத்த புழுதேரி வேளாண் அறிவியல் மையம் மாநில அளவிலான சிறந்த விவசாயிகளுக்கான விருது பெறுவதற்காக குளித்தலை இளம் விவசாயி செந்தில்குமாரை பரிந்துரை செய்திருந்தது. முன்னோடி விவசாயியான இவர் வேளாண் அறிவியல் மையத்தில் வாழையில் நவீன தொழில்நுட்பமான அடர் நடவுமுறை குறித்து பயிற்சி பெற்று வெற்றிகரமாக கடைபிடித்து, லாபம் பெற்றுள்ளார். இவர் மட்டும் பயனடையாமல் பிற வாழை விவசாயிகளையும் அடர் நடவு முறையை பின்பற்றி அதிக மகசூல் பெற வைத்துள்ளார். இச்சேவையை பாராட்டி விவசாயியை கவுரவிக்கும் வகையில் தமிழ்நாடு வேளாண் பல்கலை கழகத்தின் மூலம் கோயம்புத்தூரில் நடைபெற்ற உழவர்தின விழாவில் வேளாண்துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி உழவர் ஊக்குவிப்பாளர் விருது வழங்கினார். விருதுபெற்ற இளம் விவசாயி செந்தில்குமாரை வேளாண் அறிவியல் மையத்தின் அறங்காவலர், திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் அலுவலர்கள் பாராட்டினர்.

## ரோவர் கல்லூரியில் கொத்தமல்லி சாகுபடியாளர்களுக்கு பயிற்சி

பெரம்பலூர்,: பெரம்பலூர் அருகே திருச்சி-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் வல்லாபுரம் பிரிவு பாதையில் உள்ள தந்தை ரோவர் வேளாண் கல்லூரியில், கோலிக்கோடு பாக்கு மற்றும் நறுமணப் பயிர்கள் இயக்ககம் சார்பில் கொத்தமல்லி சாகுபடியாளர்களுக்கு நவீன தொழில் நுட்பங்கள் குறித்த பயிற்சி வகுப்பு நடைபெற்றது. ரோவர் கல்வி குழுமத்தின் தலைவர் வரதராஜநன் தலைமை வகித்து துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் அசலாம்பாஷா முன்னிலை வகித்தார். ரோவர் மேலாண்மை கல்லூரி இயக்குனர் சுவாமிநாதன், சிறப்புரையாற்றினார். தோட்டக்கலை தொழில் நுட்ப வல்லுநர் கதிரவன், உதவிப்பேராசிரியர்

முருகானந்தம் ஆகியோர் கொத்தமல்லி சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து பேசினர். பயிற்சி வகுப்பில் பெரம்பலூர் மாவட்த்திற்குட்பட்ட அடைக்கம்பட்டி, கண்ணாப்பாடி மற்றும் சத்திரமனை உட்பட பல்வேறு கிராமங்களை சேர்ந்த 100க்கும் மேற்ப்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளுக்கு தலா 5 கிலோ கொத்தமல்லி விதைகள் வழங்கப்பட்டது. பயிற்சி வகுப்பிற்கான ஏற்பாடுகளை கல்லூரி நிர்வாக அதிகாரி நீலமேகம், அலுவலக மேலாளர் முத்துசாமி, தோட்டக்கலை உதவிப்பேராசிரியர் சங்கர் உள்ளிட்டோர் செய்திருந்தனர். முடிவில் உதவிப்பேராசிரியர் முருகானந்தம் நன்றி கூறினார்.

## செட்டிக்குளம் வளாகத்தில் சின்ன வெங்காயம் ரூ.6 லட்சத்திற்கு ஏலம்

பெரம்பலூர்,: செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் 42 டன் சின்ன வெங்காயம் ரூ.6 லட்சத்திற்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது என கலெக்டர் தரேஸ்அகமது தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது : பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக்குளத்திலுள்ள வெங்காய வணிக வளாகத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் மூலம் கடந்த 11ம் தேதி திறந்த முறை ஏலம் நடத்தப்பட்டது. இதில் துறையூர் அருகேயுள்ள வைரிசெட்டிப்பாளையம், புளியஞ்சோலை, ஆலத்தூர் தாலுகா, மங்கூன், செட்டிக்குளம், நாட்டார்மங்கலம், கூத் தனூர், சிறுவயலூர், தேனூர், நத்தக்காடு, சத்திரமனை, பொம்மனப்பாடி, மாவலிங்கை, அடைக்கம்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 129 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தினை திறந்தமுறை ஏலத்திற்குக் கொண்டுவந்து விற்பனை செய்தனர். இதனை, அரியலூர், தஞ்சாவூர், செட்டிக்குளம், சத்திரமனை, பொ ம்மனப்பாடி, பாடாலூர், இரூர், சிறுவயலூர், அம்மாப்பாளையம் ஆகியப் பகுதிகளைச் சேர்ந்த 12

வியாபாரிகள் 608 மூட்டை, அதாவது 42,573 கிலோ வெங்காயத்தினை ஏலத்தில் எடுத்த னர். இதில் சின்னவெங்காயம் மிக அதிக பட்சமாக கிலோ ரூ.25.50க்கும், விதை வெ ங்காயம் அதிக பட்சமாக கிலோ ரூ24.50க்கும், சராசரியாக ஒரு கிலோ ரூ.14க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் ரூ.5,96,564க்கு சின்ன வெங்காயம் விற் பனை செய்யப்பட்டு, அனைத்து விவசாயிகளு க்கும் பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. இந்த வணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் திறந்தமுறை ஏலம் நடைபெற்று வருகிறது. எனவே விவசாயிகள் தங்களது வெங்காய விளைபொருளை நன்கு சுத்தப்படுத்தி, தரம் பிரித் இன்று காலை 10மணிக்குள் கொண்டு வந்து விற்பனை செய்து பயன்பெறலாம் எனத் தெரிவித்துள்ளார்.

## <u>மதுக்கூரில்ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை துவக்கம்</u>

பட்டுக்கோட்டை, : மதுக்கூர் வடக்கு கிராமத்தில் விவசாயிகள் சார்ந்த ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க முறை துவக்க விழா நடந்தது. தஞ்சை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் ராமதாஸ் தலைமை வகித்தார். மதுக்கூர் வேளாண்மை அலுவலர் பாலையன் முன்னிலை வகித்தார். துணை வேளாண் அலுவலர் கலைச்செல்வன் வரவேற்றார். வேளாண் வணிக திட்டங்கள் குறித்து வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) சுஜாதா பேசினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் விவேக், வட்டார தொழில் நுட்ப வல்லுனர் சுரேஷ், சரவணன் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண்மை உதவி அலுவலர் கார்த்திக் நன்றி கூறினார்.

# மக்காச்சோள சாகுபடியில் தொழில்நுட்பம் கடைபிடித்தால் ஏக்கருக்கு 3,000 கிலோ மகசூல்

சேதுபாவாசத்திரம், : வீரிய ஒட்டு மக்காச்சோளம் சாகுபடியில் தொழில்நுட்பத்தை கடைபிடித்தால் ஏக்கருக்கு 3,000 கிலோ வரை மகசூல் கிடைக்கும் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: மக்காச்சோளம் கால்நடை தீவனமாகவும், சமையல் எண்ணெய் எடுப்பதற்காகவும் பயன்படுவதோடு தொழிற்சாலைகளில் மக்காச்சோளம் ஸ்டார்ச், பிரீவர்ஸ், மக்காச்சோளம் மைதா, சிரப், சர்க்கரை, குளுக்கோஸ் போன்ற பல பொருட்கள் தயரிக்கவும் பயன்படுகிறது. இதில் கோ-1, கே-1, கங்கா-5, கே.எச்-1,2,3, கோ.எச்.எம்-5, எம்-900, எம்.ஹைசெல், சின்ஜென்டா, என்.கே-6240, பயனீர்-30 வி-62, பயனீர்-30, வி-92 மற்றும் பிக்பாஸ் ஆகியவை முக்கிய வீரிய ஒட்டு ரகங்களாகும். ஏக்கருக்கு 6 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதை மூலம் பூசனநோயை தடுக்க ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோ டெர்மாவிரிடி என்ற உயிரியல் பூசான கொல்லியை கலந்து 24 மணி நேரம் வைத்திருந்து பின்பு விதைக்க வேண்டும். இத்துடன் உயிர் உரவிதை நேர்த்தியும் செய்ய வேண்டும். ஏக்கருக்கு 500 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாவை ஆரிய வடிகஞ்சியில் (அரிசி) கலந்து அதனுடன் பூசன விதைநேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் அரை மணிநேரம் உளர்த்தி பின்பு 60 ஜ் 20 செ.மீ இடைவெளியில் அதாவது பாருக்கு பார் 60 செ.மீ செடிக்கு செடி 20 செ.மீ இடைவெளியில் ஒரு குழிக்கு ஒரு விதை வீதம் 4 செ.மீ ஆழத்தில் விதையை ஊன்ற வேண்டும். ஒரு ச.மீ 8 செடிகளும் ஒரு ஏக்கரில் 32,240 செடிகளும் இருக்குமாறு பயிர் எண்ணிக்கையை பராமரிக்க வேண்டும். விதைப்புக்கு முன் ஏக்கருக்கு 5 டன் தொழுஉரம் அல்லது தென்னை

நார்கழிவு உரமிட வேண்டும். அத்துடன் நடவுவயலில் ஏக்கருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம், 2 கிலோ பாஸ்போ பாக்டீரியா உயிர் உரங்களை 10 கிலோ நன்கு மக்கிய எரு மற்றும் 10 கிலோ மணலுடன் கலந்து இடவேண்டும். சாகுபடிக்கு மொத்தம் பரிந்துரைக்கப்படும் உர அளவான 119 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 34 கிலோ பொட்டாஸ் இதில் அடியுரமாக மட்டும் 30 கிலோ யூரியா, 156 கிலோ சூப்பர் பாஸ்பேட், 17 கிலோ பொட்டாஷ் இடவேண்டும். விதைத்த 25ம் நாள் முதல் மேலுரமாக 60 கிலோ யூரியா, 45ம் நாள் 29 கிலோ யூரியா, 17 கிலோ பொட்டாசும் இடவேண்டும். விதைத்த 3 நாட்களுக்கு பின் மண்ணில் போதுமான ஈரம் இருக்கும் போது களைக்கொல்லியான அட்ரசின் 50 சதம் நனையும் தூள்-200 கிராம் அல்லது ஆலாகுளோ 1.6 லிட்டர் என்ற அளவில் 360 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான மூலம் தெளிக்க வேண்டும். ஆரம்ப கட்டத்தில் குருத்துபுழு தாக்குதல் தென்படும். இதை கட்டுப்படுத்த செடிக்கு 2 கிராம் வீதம் பியூரடான் குருனை மருந்தை மணலில் கலந்து செடியின் குருத்தில் விதைத்த 20வது நாள் இடவேண்டும். தேவைக்கேற்ப 6 முதல் 8 முறை நீர்பாசனம் செய்ய வேண்டும். பூக்கும் தருணத்தில் தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் பார்த்து கொள்ள வேண்டும். இவ்வாறு தொழில்நுட்பங்களை கடைபிடித்தால் ஒரு ஏக்கரில் 2,500 முதல் 3,000 கிலோ வரை மகசூல் எடுத்து ரூ.45,000 வரை வருமானம் பெறலாம்.

## தேவைப்படும் இடங்களில் 24 மணி நேரத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் கலந்தாய்வு கூட்டத்தில் அமைச்சர் தகவல்

தஞ்சை, : தேவைப்படும் இடத்தில் 24 மணி நேரத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்று கலந்தாய்வு கூட்டத்தில் அமைச்சர் வைத்திலிங்கம் தெரிவித்தார். தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டிணம் மாவட்டங்களில் சம்பா -2015 பருவ நெல் கொள்முதல் தொடர்பான கலந்தாய்வு கூட்டம் தஞ்சை கலெக்டர் அலுவலக

கூட்டரங்கில் நடந்தது. உணவுத்துறை அமைச்சர் காமராஜ், மீன்வளத்துறை அமைச்சர் ஜெயபால் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் அமைச்சர் வைத்திலிங்கம் பேசும்போது, கொள்முதல் நிலையங்களில் போடுகிற நெல்லுக்கு ரொக்கமாகவும், வங்கிகள் மூலமாகவும் பண பட்டுவாடா செய்ய வேண்டுமென விவசாயிகள் தெரிவித்துள்ளனர். விவசாயிகளுடைய கருத்துக்கள் தமிழக முதல்வரின் கவனத்துக்கு கொண்டு சென்று நிறைவேற்றப்படும். கொள்முதல் நிலையங்களில் தவறுகள் நடக்காத வகையில் பல்வேறு ஆய்வுகள் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நெல் தேங்காமல் உடனடியாக லாரிகள் மூலம் கிடங்குகளுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நெல்லை சேமித்து வைப்பதற்குரிய கிடங்கு வசதிகளும் உரிய அளவில் உள்ளது. விவசாயிகள் சாக்குகள் வழங்க வேண்டுமென வைக்கப்பட்டுள்ள கோரிக்கை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். நேரடி நெல் கொள்முதல் நிலையம் எங்கு தேவைப்படுகிறதோ உடனடியாக 24 மணி நேரத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்றார். உணவுத்துறை அமைச்சர் காமராஜ் பேசும்போது, நடப்பு சம்பா 2015 நெல் கொள்முதல் பருவத்தில் தமிழக விவசாயிகள் பயன்பெறும் வகையில் மாநில அரசின் ஊக்கத்தொகை சன்னரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.70ம், சாதா ரக நெல்லுக்கு ரூ.50ம் சேர்த்து சன்ன ரகம் குவிண்டால் ரூ.1470, சாதா ரகம் ரூ.1410ம் அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு சிரமம் ஏதுமின்றி அவர்கள் கொண்டு வரும் நெல்லை கொள்முதல் செய்து உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பெருவிவசாயி கள், கோயில்களில் வசூல் செய்யப்படும் குத்தகை நெல் மற்றும் 300 மூட்டைகளுக்கு மேல் வைத்திருப்போர் வசதிக்கென அவர்களின் இருப்பிடத்துக்கே சென்று நெல் கொள்முதல் செய்யும் திட்டம் செயல்படுத்தப்படும். கொள்முதல் நிலையங்களில் முறைகேடு தடுக்கும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக மாவட்ட, மாநில அளவிலும் சிறப்பு

கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கொள்முதல் செய்யப்படும் நெல் முழுவதும் கொள்முதல் நிலையங்களிலிருந்து லாரிகள் மூலம் நவீன அரிசி ஆலைகள், தனியார் அரவை முகவர்கள், அரசு சேமிப்பு கிடங்குகள், திறந்தவெளி சேமிப்பு நிலையங்கள், ரயில் தலைப்புகள் ஆகிய இடங்களுக்கு தினம்தோறும் இயக்கம் செய்யப்படும். வெளிமாவட்டங்களில் உள்ள அரசு மற் றும் தனியார் அரிசி ஆலைகளுக்கு ரயில் வேகன்கள் மூலம் தஞ்சை, கும்பகோ ணம், மயிலாடுதுறை, சீர்காழி, நாகப்பட்டிணம், திருவாரூர், நீடாமங்கலம் ஆகிய ரயில் தலைப்புகளிலிருந்து நெல் இயக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தலைவர் தங்கமுத்து, எம்.பி.க்கள் தஞ்சை பரசுராமன், மயிலாடுதுறை பாரதிமோகன், எம்எல்ஏக்கள் ரங்கசாமி, ரத்தினசாமி, துரைக்கண்ணு, பவுன்ராஜ், காமராஜ், சக்தி, நாகைமாலி, உலகநாதன், உணவுபொருள் மற்றும் நுகர்பொருள் பாதுகாப்பு ஆணையர் கோபாலகிருஷ்ணன், கலெக்டர்கள் தஞ்சை சுப்பையன், திருவாரூர் மதிவாணன், நாகைப்பட்டிணம் பழனிச்சாமி கலந்து கொண்டனர். குறைகளை தெரிவிக்க தொலைபேசி எண் உணவுத்துறை அரசு முதன்மை செயலாளர் முகமது நஜிமுதீன் பேசும்போது, விவசாயிகள் நெல் கொள்முதல் சம்பந்தமான குறைகளை தெரிவிக்க முதுநிலை மண்டல மேலாளர் மற்றும் அந்தந்த கலெக்டர்களை அணுகலாம். இதன்படி கட்டுப்பாட்டு அறை தஞ்சை 04362-236823, திருவாரூர்- 04366-226900, நாகப்பட்டிணம் 04365-251353 மற்றும் சென்னை நிர்வாக இயக்குனர் அலுவலகம் 94451-90660, 9445190661, 9445190662 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். அனைத்து கொள்முதல் நிலையங்களிலும் இந்த விவரம் விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்படும். கலெக்டர்கள் துண்டு பிரசுரங்கள் மூலம் கொள்முதல் விலை, ஈரப்பதத்துக்கான பணம் பிடித்தம் போன்ற விவரங்களை விவசாயிகளுக்கு தெரியப்படுத்த விரிவான நடவடிக்கை எடுக்க கேட்டு

கொள்ளப்படுகிறார்கள். கொள்முதல் நிலையங்களில் போதுமான சாக்கு, பணம் கையிருப்பு இருப்பதை கண்காணிப்பு அலுவலர்கள் தினமும் உறுதி செய்ய வேண்டும். கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் அன்றாடம் இயக்கம் செய்யப்படுவதையும், கொள்முதல் நிலையங்களில் நெல் தேங்கி கொள்முதல் பணிக்கு எவ்வித இடையூறும் ஏற்படாமல் கண்காணித்து வரவேண்டும் என்றார்.

## <u>கோவில்பட்டியில் மஞ்சள், பனங்கிழங்கு விற்பனை தீவிரம்</u>

கோவில்பட்டி, :தமிழர்களின் திருநாளாம் தைப்பொங்கல் திருவிழா நாளை மறுதினம் (15ம் தேதி) கொண்டாடப்படுகிறது. இந்தாண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கோவில்பட்டி நகரில் மார்க் கெட், மெயின் ரோடு, கிருஷ் ணன் கோவில் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மஞ்சள் கொத்துகள், பனங்கிழங்குகளின் விற் பனைகளைகட்டியுள்ளது. கோவில் பட்டி அருகே மந்தித்தோப்பு, கழுகுமலை, கயத்தாறு, நாலாட்டின்புதூர், முடுக்குமீண்டான் பட்டி உள்ளிட்ட சுற்றுப்பகுதி கிராமங்களில் விளைந்த மஞ்சள் குலை களை வியாபாரிகள் மொத்தமாக வாங்கி வந்து விற்கின்றனர். மஞ்சள் குலை ஒன் றுக்கு ரூ.20 வரை விற்கப்படுகிறது. இதேபோல் ஏரல், நாசரேத், திருச்செந்தூர், சேர்ந்தமரம், குரும்பூர் போன்ற பல்வேறு பகுதிகளில் இருந்தும் பனங்கிழங்குகள் மொத்தமாக கொள் முதல் செய்து வியாபாரிகள் விற்கின்றனர். 10 பனங்கிழங்குகள் அடங்கிய கட்டு ஒன்றுக்கு ரூ.20 வரை விற்கப்படுகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## <u>ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் கொப்பரை தேங்காய் ஏலம்</u>



ஆனைமலை, ஆனைமலை ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் நேற்று கண்காணிப்பாளர் (பொறுப்பு) ஜெயராம கிருஷ்ணன் முன்னிலையில் ஏலம் நடைபெற்றது. 17 விவசாயிகள் 93 மூட்டை கொப்பரை தேங்காய்களை ஏலத்திற்கு கொண்டு வந்தனர். இதில் 4 வியாபாரிகள் கலந்துகொண்டனர். முதல் ரக 62 மூட்டை கொப்பரை தேங்காய் ஒரு கிலோ ரூ.86 முதல் ரூ.91 வரையும், 2–ம் ரக 31 மூட்டை கொப்பரை தேங்காய் ஒரு கிலோ ரூ.60.70 முதல் ரூ.80.20 வரை ஏலம் போனது. கடந்த வாரம் 115 மூட்டை கொப்பரை தேங்காய்களை ஏலத்திற்கு கொண்டு வந்தனர். ஆனால் இந்த வாரம் பொங்கல் பண்டிகை வருவதால் 22 மூட்டை கொப்பரைகள் குறைவாக வந்தன. எனவே வரத்து குறைந்து இருந்ததால், விலை அதிகரித்து இருந்ததாக கண்காணிப்பாளர் (பொறுப்பு) ஜெயராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

**பொங்கல் பண்டிகையையொட்டி கடலூரில், விற்பனைக்காக மஞ்சள் கொத்துகள், மண்பானைகள் குவிந்தன பன்னீர் கரும்புகள் வரத்து குறைந்தது**



கடலூர், பொங்கல் பண்டிகையையொட்டி கடலூரில் விற்பனைக்காக மஞ்சள் கொத்துகள், மண்பானைகள் குவிந்தன. பன்னீர் கரும்புகள் வரத்து குறைந்தது.

<u>பொங்கல்பண்டிகை</u>

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகை நாளை (வியாழக்கிழமை) கோலாகலமாக கொண்டாடப்பட உள்ளது. இப்பண்டிகையை

மகிழ்ச்சியுடன் கொண்டாட கடலூர் மாவட்ட மக்கள் தயாராகி வருகின்றனர். பொங்கல் அன்று அதிகாலையில் சூரியக்கடவுளுக்கு படைக்கப்படும் படையலில் மங்கலத்தின் அடையாளமாக மஞ்சள் கொத்துகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த மஞ்சள் கொத்துகள் சிதம்பரம், பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, விருத்தாசலம் ஆகிய பகுதிகளில் விவசாயிகள் பயிரிட்டிருந்தனர். தற்போது அவற்றை வியாபாரிகள் அறுவடை செய்து மார்க்கெட்டுக்கு கொண்டு வந்த வண்ணம் உள்ளனர். இதனால் மஞ்சள் கொத்துகளின் வரத்து சூடுபிடிக்க தொடங்கி உள்ளது. கடலூர் உழவர் சந்தையிலும் நேற்று ஏராளமான மினி லாரிகளில் மஞ்சள் கொத்துகள் வந்து இறங்கியதை பார்க்க முடிந்தது. அவை பண்ருட்டி அருகே உள்ள திருவதிகை மற்றும் பாலூர் பகுதிகளில் இருந்து அறுவடை செய்து கொண்டு வரப்பட்டவை. ஒரு மஞ்சள் கொத்துக்களை பொறுத்த வரை சிறியது ரூ.10, நடுத்தரம் ரூ.15, பெரியது ரூ.20 என விற்பனை செய்யப்படுகிறது.

பன்னீர்கரும்புகள்

அதேபோல பொங்கல் பண்டிகைக்கே உரித்தான கரும்புகள் அறுவடை செய்யப்பட்டு வருகின்றன. சிதம்பரம், சேத்தியாத்தோப்பு, பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி உள்பட பல்வேறு இடங்களில் விவசாயிகள் பயிரிட்டு இருந்த கரும்புகள் அறுவடை செய்யப்பட்டு வெளி மாவட்டங்களுக்கு லாரிகளில் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. ஆனால் உள்ளூர் மார்க்கெட்டுகளுக்கு வரவில்லை. ஒரு சில இடங்களில் குறைந்த எண்ணிக்கையில் கரும்புகள் இருப்பதை பார்க்க முடிகிறது. இதனால் இந்த ஆண்டு பன்னீர் கரும்புகளின் விலை உயருமோ என்ற அச்சம் பொதுமக்கள் மத்தியில் உள்ளது. இது குறித்து விவசாயி ஒருவர் கூறும்போது, இந்த ஆண்டு பண்ருட்டி மற்றும் சிதம்பரம் ஆகிய 2 தாலுகாக்களிலும் 1,700 ஹெக்டேர் நிலப்பரப்பில் பன்னீர் கரும்புகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. கரும்புகள் அறுவடைக்கு தயாராக இருந்தபோதும் உள்ளூர் வியாபாரிகள் யாரும் வாங்க வரவில்லை. இதனால் காஞ்சிபுரம் போன்ற வெளி மாவட்டங்களுக்கு அனுப்பி

வைக்கிறோம். மேலும் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விலை சற்று உயர்ந்துள்ளது. இந்த 2 காரணங்களால்தான் உள்ளூர் மார்க்கெட்டு களுக்கு பன்னீர் கரும்புகளின் வரத்து குறைவாக இருக்கிறது. நாளை(அதாவது இன்று) மார்க்கெட்டுகளுக்கு கரும்புகள் வர வாய்ப்புகள் உள்ளது என தெரிவித்தார். இதுதவிர வாழைத்தார், வாழை இலைகளும் மார்க்கெட்டுகளுக்கு வந்து கொண்டிருக்கிறது. வாழைத்தாரை பொறுத்தவரை ரூ.100 முதல் ரூ.300 வரை விற்பனை செய்யப்படுகிறது.

<u>மண்பானைகள்</u>

பொங்கல் வைப்பதற்கான மண்பானைகள் கடலூர் மஞ்சக்குப்பம் அண்ணாமார்க்கெட், பான்பரி மார்க்கெட் ஆகிய பகுதிகளில் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ளது. அண்ணாமார்க்கெட்டில் உள்ள மொத்த விற்பனை கடைகளுக்கு, நேற்று ஆலப்பாக்கம், தென்னல், திண்டிவனம் ஆகிய பகுதியில் இருந்து வாகனங்கள் மூலம் மண்பானைகள் வந்து இறங்கியது. இருப்பினும் அதன் விற்பனை மந்தமாகவே இருக்கிறது. ரூ.40, ரூ.50, ரூ.100, ரூ.150 முதல் ரூ.300 வரை மண்பானைகள் விற்பனை செய்யப்படுகிறது. இதுபற்றி மஞ்சக்குப்பம் அண்ணா மார்க்கெட்டில் உள்ள வியாபாரி ஒருவர் கூறுகையில், மண்பானையில் பொங்கல் வைத்து வழிபட்டால் தான் நல்லது. ஆனால் சிலர் சில்வர், அலுமினிய பாத்திரங்களில் பொங்கல் வைக்கிறார்கள். இதனால் மண்பானை விற்பனை குறைந்து விட்டது. கடந்த ஆண்டு விற்பனைக்காக 500 மண்பானைகள் வாங்கினேன். ஆனால் இந்த ஆண்டு 200 பானைகள் மட்டுமே வாங்கி உள்ளேன். இருப்பினும் வியாபாரம் மந்தமாகவே இருக்கிறது என்றார்.

**அந்தியூர், அம்மாபேட்டை பகுதியில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம் மாவட்ட கலெக்டர் தகவல்**



ஈரோடு, அந்தியூர் மற்றும் அம்மாபேட்டை பகுதியில் நீர்வடிப்பகுதி திட்ட உறுப்பினர் பணியிடங்களுக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று மாவட்ட கலெக்டர் எஸ்.பிரபாகர் தெரிவித்து உள்ளார்.

உறுப்பினர் பணியிடம்

ஈரோடு மாவட்டத்தில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலம் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இந்த திட்டங்களுக்காக ஒவ்வொரு பகுதிக்கும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு பணியாற்றி வருகிறார்கள். இந்த திட்டத்துக்காக அந்தியூர், அம்மாபேட்டை ஆகிய பகுதிகளில் வேளாண்மை, என்ஜினீயர், சமூகவியலர் ஆகிய உறுப்பினர் பணியிடங்களும், தாராபுரம், மூலனூர் ஆகிய பகுதிகளுக்கு வேளாண் உறுப்பினர் பணியிடமும் காலியாக உள்ளது. வேளாண்மை உறுப்பினர் பணியிடத்துக்கு விண்ணப்பிப்பவர்கள் வேளாண்மை மற்றும் தோட்டக்கலையில் இளநிலை பட்டம் அல்லது முதுநிலை பட்டம் அல்லது பட்டயம் முடித்திருக்க வேண்டும். இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு மதிப்பூதியமாக ரூ.10 ஆயிரமும், ரூ.1,000 பயணப்படியாகவும், பட்டய படிப்பு படித்தவர்களுக்கு மதிப்பூதியமாக ரூ.8 ஆயிரமும், பயணப்படியாக ரூ.800–ம் வழங்கப்படுகிறது.

ரூ.10 ஆயிரம்

என்ஜினீயர் உறுப்பினர் பணியிடத்துக்கு விண்ணப்பிப்பவர்கள் வேளாண்மை என்ஜினீயர் அல்லது கட்டிடவியலில் இளநிலை பட்டம்

அல்லது முதுநிலை பட்டம் அல்லது பட்டயம் முடித்திருக்க வேண்டும். இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு மதிப்பூதியமாக ரூ.10 ஆயிரமும், ரூ.1,000 பயணப்படியாகவும், பட்டயப்படித்தவர்களுக்கு மதிப்பூதியமாக ரூ.8 ஆயிரமும், ரூ.800 பயணப்படியாகவும் வழங்கப்படுகிறது. சமூகவியலர் உறுப்பினர் பணியிடத்துக்கு விண்ணப்பிப்பவர்கள் சமூகவியல், பொருளாதாரத்தில் இளநிலை, முதுநிலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். இளநிலை, முதுநிலை பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு மதிப்பூதியமாக ரூ.10 ஆயிரமும், ரூ.1,000 பயணப்படியாகவும் வழங்கப்படுகிறது.

30–ந் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்

உறுப்பினர் பதவி தற்காலிகமானதாகும். நீர்வடிப்பகுதி திட்டங்கள் மற்றும் கணினியில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். மேலும் அந்தந்த பகுதியை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். உறுப்பினர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தங்களுடைய சுய விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அதனுடன் தகுதி சான்றிதழையும் இணைத்து வேளாண்மை இணை இயக்குனர் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை வித்யா நகர், திண்டல், ஈரோடு என்ற முகவரிக்கு தபால் மூலம் வருகிற 30–ந் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

**கடந்த ஆண்டை விட கரும்பு, மஞ்சள் விலை அதிகம் விளைச்சல் குறைவால் விலை ஏற்றம் என வியாபாரிகள் தகவல்**



இந்த ஆண்டு கரும்பு, மஞ்சள் விலை கணிசமான அளவில் உயர்ந்துள்ளது. விளைச்சல் குறைவு காரணமாக விலை ஏற்றம் என வியாபாரிகள்தெரிவித்தனர்.

பொங்கல்பண்டிகை

தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை என்றதும் நமக்கு முதலில் ஞாபகம் வருவது கரும்பு தான். இந்த ஆண்டு பொங்கல் பண்டிகை நாளை கொண்டாடப்படுகிறது. இதனால் கரும்பு, மஞ்சள் கொத்து வாங்குவதற்காக மக்கள் படையெடுத்து வந்த வண்ணம் உள்ளனர். கடந்த ஆண்டை விட தற்போது கரும்பு விலை அதிகமாகவே உள்ளது. கடந்த ஆண்டு 15 கரும்பு அடங்கிய 1 கட்டு ரூ.150-ல் இருந்து ரூ.250 வரை விற்பனையானது. தற்போது கரும்பு 1 கட்டின் விலை ரூ.250-ல் இருந்து ரூ.350 வரை விற்பனை செய்யப்படுகிறது. சில்லறையாக ஒரு கரும்பின் விலை ரூ.25-ல் இருந்து ரூ.35 வரையிலும் விற்பனை நடைபெறுகிறது. கரும்பின் விலை உயர காரணம் விளைச்சல் குறைவு எனசொல்லப்படுகிறது.

மழைதாமதம்

இது குறித்து சிம்மக்கல் வியாபாரி போஸ் கூறியதாவது;- மேலூர், அலங்காநல்லூர் ஆகிய பகுதிகளில் இருந்து தான் கரும்பு விற்பனைக்கு வருகிறது. கரும்பு நடப்பட்ட காலத்தில் போதிய மழை இல்லாததால் கரும்பு விளைச்சல் கணிசமாக இல்லை. தற்போது பெய்த மழை 2 மாதங்களுக்கு முன்னர் பெய்திருந்தால் கரும்பு விளைச்சல் நன்றாக இருந்திருக்கும். இவ்வாறு அவர் சொன்னார். அதே போல் மஞ்சள் கொத்தின் விலையும் கணிசமாக அதிகரித்துள்ளது. விவசாயிகள் மஞ்சள் பயிர் விளைச்சலுக்கு 6 மாதங்களுக்கு முன்னர் பயிரிட வேண்டும். அதன்படி விவசாயிகள் இந்த ஆண்டும் தாமதமான மழையால் குறைவாகவே பயிரிட்டுள்ளனர். கடந்த ஆண்டு ஒரு மஞ்சள் கொத்தின் விலை ரூ.2 முதல் ரூ.8 வரை இருந்தது. தற்போது ரூ.5 முதல் ரூ.10 வரை விலை சொல்லப்படுகிறது. என்ன இருந்தாலும், கரும்பு, மஞ்சள் இல்லாமல் பொங்கலா என்பதால், மக்கள் அதிக விலை கொடுத்து வாங்கியே செல்கிறார்கள்.

## ஊட்டி, குன்னூரில் பொங்கல் பொருட்கள் விற்பனை விறுவிறுப்பு



ஊட்டி, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஊட்டி, குன்னூரில் கரும்பு, மஞ்சள், வாழை உள்ளிட்ட பொங்கல் பொருட்கள் விற்பனை சூடுபிடித்து உள்ளது.

ஊட்டிமார்க்கெட்

ஆண்டு தோறும் தை மாதம் முதல் நாள் பொங் கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இதனை தொடர்ந்து உழவர்கள் தங்கள் நிலத்தில் விளைந்த புத்தரிசியை கொண்டு புதுப்பானையில் மஞ்சலிட்டு பொங்கலை வைத்து வருகிறார்கள்.பொங்கல் திருவிழா தமிழர் திருநாளாக கொண்டாடப்படுகிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு ஊட்டி, குன்னூர், கூடலூர் ஆகிய நகராட்சி மார்க்கெட்டு களுக்கு கரும்பு, புதுப்பானைகள், வாழைக்கன்று கள், மலர்கள் ஆகியவை விற்பனைக்கு வந்துஉள்ளன.

கரும்புவிலைஉயர்வு

நீலகிரி மாவட்டத்தில் பொங்கலுக்கு தேவை யான பொருட்கள் அனைத்தும் சமவெளி பகுதி களில் இருந்தே கொண்டு வர வேண்டிய நிலை உள்ளது. மலைப்பாதையில் லாரிகள் மூலம் பொருட்கள் கொண்டு வரப்படுவதால் வாடகை அதிகரிக்கிறது. இதன் காரணமாக இந்த ஆண்டு பொங்கல் பொருட்களின் விலை உயர்ந் துள்ளது. ஒரு கரும்பின் விலை சமவெளி பகுதி யில் ரூ.15 முதல் ரூ.20-க்கு விற்பனை செய்யப்படு கிறது. ஆனால் ஊட்டி மார்க்கெட்டில் ஒரு கரும்பின் விலை ரூ.45 முதல் ரூ.60 வரை என்று விற்பனை செய்யப்படுகிறது. புதுப்பானைகள் ரூ.100 முதல் ரூ.300 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

குன்னூர்,கூடலூர்

இதே போல் குன்னூர், கூடலூர் மார்க்கெட் பகுதியில் விற்பனைக்கு

கரும்பு, மஞ்சள், வாழை உள்ளிட்ட பொருட்கள் விற்பனைக்கு குவித்து வைக்கப்பட்டு உள்ளது. இந்த பொருட்களை வாங்க ஏராளமான பொதுமக்கள் நேற்று குவிந்தனர். இதனால் மார்க்கெட் பகுதி பொதுமக்கள் கூட் டத்தால் நிரம்பி வழிந்தது. இந்த ஆண்டு கரும்பு உள்ளிட்ட பொருட்கள் விலை உயர்ந்து உள்ளது. கூடலூரில் ஒரு ஜோடி கரும்பு ரூ.100 முதல் ரூ.110 வரை விற்பனை செய்யப்படுகிறது. குன்னூரில் ஒரு கரும்பு ரூ.45 முதல் ரூ.55 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதே போல் மண்பானை, பூக்களின் விலையும் பல மடங்கு உயர்ந்து உள்ளதால் பொதுமக்கள் அவதி அடைந்து உள்ளனர். நாளை (வியாழக்கிழமை) பொங்கல் பண்டிகை கொண்டாடப்பட உள்ளதால் மார்க்கெட்டுகளில் பொதுமக்கள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது.